# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2016.09.28

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 14/2016**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

## உபவேந்தர் பதவிக்கான நியமனம்

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பான 2006.12.11 ஆம் திகதிய 15/2006 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கையின் ஊடாக திருத்தப்பட்டவாறான 2006.08.15 ஆம் திகதிய 880 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

உபவேந்தர் பதவிக்கான நியமனத்தை மேற்கொள்ளும்போது பின்பற்றிய நடைமுறையைக் கவனத்திற் கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது வாக்கெடுப்பின்போது வேட்பாளர்கள் 1 ஆவது, 2 ஆவது அல்லது 3 ஆவது இடத்திற்காக சம எண்ணிக்கை வாக்குகளைப் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்களில் மேலும் பின்பற்ற வேண்டிய அறிவுரைகளை உட்படுத்துவதற்கும் ஏனைய வழிகாட்டல்களை உறுதிப்படுத்திக் கொள்வதன் நிமித்தம் மேலும் சில படிமுறைகளைச் சேர்ப்பதற்கும் 2016.09.08 ஆம் திகதி நடைபெற்ற தனது 948 ஆவது கூட்டத்தொடரின்போது தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, உபவேந்தர் பதவிக்கான நியமனத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய திருத்தப்பட்ட நடைமுறை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது;

1. செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலொன்றின் ஊடாக பதவிக்கான விண்ணப்பம் / பெயர் முன்மொழிவுகள் கோரப்படல் வேண்டும்.

2. விண்ணப்பிப்பதற்காக முக்கிய நபர்களை கண்டறிதல் மற்றும் ஊக்குவிப்பதற்காக பேராசிரியர் அல்லது உயர் பதவியை வகிக்கும் சிரேஷ்ட கல்விசார் ஆளணி உறுப்பினர்கள் மூவர் (03) அடங்கிய பொருத்தமான தேடல் குழுவொன்றை பல்கலைக்கழக பொது நிர்வாக சபை நியமித்தல் வேண்டும். தேடல் குழு அங்கத்தவர்களிடையே குறைந்தது ஒருவராவது பல்கலைகத்தின் முழு நேர பீடாதிபதி ஒருவராக இருத்தல் வேண்டும்.

3. பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான தூர நோக்கு அடங்கிய கூற்று, உபவேந்தர் பதவியில் நியமிக்கப்பட்டால் நிறைவேற்றுவதற்கு அவரால் முன்வைக்கப்படும் பிரேரணைகளை பற்றிய சுருக்கமான விபரம் மற்றும் விண்ணப்பதாரியின் பிறந்த திகதி உள்ளடக்கப்பட்ட பூரணமான சுய விபரக் கோவையை சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

4. தற்போதைய உபவேந்தர் விண்ணப்பதாரியாகும் சந்தர்ப்பத்தின்போது மேலே 03 ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுக்கு மேலதிகமாக அவருடைய முதலாவது பதவிக் காலத்தில் நிறைவேற்றிய விடயங்களை வெளிப்படுத்தும் வகையிலான அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. ஒவ்வொரு நபர்களினதும் தகைமைகள், தொழில் அனுபவங்கள் மற்றும் தூர நோக்கு அடங்கிய கூற்று சம்பந்தமான மதிப்பீட்டை பொது நிர்வாக சபைக்கு முன்வைப்பதற்காக உபவேந்தர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது பெயர் குறிப்பிடப்படும் நபராகுவதற்கான எதிர்பார்ப்பு இல்லாத பொது நிர்வாக சபை உறுப்பினர்கள் மூவர் (03) அடங்கிய மதிப்பீட்டுக் குழுவொன்றை பொது நிர்வாக சபை நியமித்தல் வேண்டும்.

6. வாக்கெடுப்பு நடாத்தப்படும் திகதிக்கு குறைந்தது மூன்று (03) தினங்களுக்கு முன்னர், மேலே 3 மற்றும் / அல்லது 4 ஆவது உறுப்புரையின் பிரகாரம் விண்ணப்பதாரிகளினால் முன்வைக்கப்பட்ட சகல ஆவணங்களினதும் பிரதிகளுடன் அடுத்த உபவேந்தரைத் தேர்ந்தெடுப்பதற்கான விசேட பொது நிர்வாக சபைக் கூட்டத்திற்கான அறிவித்தல் சகல பொது நிர்வாக சபை அங்கத்தவர்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட கண்காணிப்பாளருக்கு கிடைக்கப்பெற்றதனை பொது நிர்வாக சபையின் செயலாளர் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

7. பொது நிர்வாக சபையின் செயலாளர், வாக்கெடுப்பு நடாத்தப்படுவதற்கு போதுமானளவு காலத்திற்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் கண்காணிப்பாளர் ஒருவரை நியமிக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் கோரிக்கை விடுத்தல் வேண்டும்.

8. உபவேந்தர் பதவிக்காக தகைமை பெற்ற சகல வேட்பாளர்களும் வாக்கெடுப்பு நடாத்தப்படுவதற்கு முன்னர் பொது நிர்வாக சபையிடம் குறைந்தது பத்து (10) நிமிட நேரம் சுருக்கமான முன்னிலைப்படுத்துகைக்காக (Presentation) அழைக்கப்படுவார்கள். பொது நிர்வா சபையினால் மூன்று அபேட்சகர்களைப் பெயர் குறிப்பிட வேண்டியிருப்பதனால் தகைமை பெற்றுள்ள அனைத்து வேட்பாளர்களதும் பெயர்கள் அடங்கிய வாக்குச் சீட்டொன்றைத் தயாரிக்க வேண்டியிருப்பதுடன் பொது நிர்வாக சபை இரகசிய வாக்கெடுப்பொன்றின் ஊடாக இறுதித் தீர்மானத்தை எடுக்கும். அனைத்து பொது நிர்வாக சபை அங்கத்தவரும் மூன்று வேட்பாளர்களுக்காக 03 வாக்குகளை அளிப்பதற்கான உரிமையைப் பெறுகின்றார்கள். பொது நிர்வாக சபை அங்கத்தவர் ஒருவர் வேட்பாளராக இருப்பின் அவர் வாக்களிக்கும் உரிமையைப் பெற மாட்டார்.

9. வாக்களிப்பின்போது இரண்டு அல்லது அதனிலும் அதிகமான வேட்பாளர்கள் முதலாவது, இரண்டாவது அல்லது மூன்றாவது இடத்திற்காக சம எண்ணிக்கை வாக்குகளைப் பெற்றிருப்பின் இன்னுமொரு வாக்கெடுப்பை நடாத்துவதற்கான அதிகாரம் பொது நிர்வாக சபைக்கு உண்டு. பின்னர் நடாத்தப்படும் வாக்கெடுப்பானது சம எண்ணிக்கை வாக்குகளைப் பெற்ற வேட்பாளர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்படல் வேண்டும். அத்துடன் முன்னைய வாக்கெடுப்பின் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டவுடனேயே இதனை மேற்கொள்ள வேண்டும்.

10. அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்ட மூவரின் (03) பெயர்களை மேலே 3 மற்றும் 4 ஆம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும். முன்வைக்கப்படும் பெயர்களை தரப்படுத்துவதற்கு தீர்மானிப்பதாயின் அவர்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தரப்படுத்தல் வேண்டும்.

11. பிரசித்திப்படுத்தப்பட்ட அறிவித்தல் ஊடாக மூன்று விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் அறிவித்தலை விரிவான வகையில் பிரசித்தப்படுத்தும் முறையை புதிதாக மேற்கொள்ளல் வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் குழுவுக்கு பெயர் குறிப்பிட்டு அனுப்புவதற்கு மூவரை இனங்கண்டு கொள்ளும்வரை மீண்டும் மீண்டும் இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2016.10.03 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படுவதுடன் அதற்கமைய 2006 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய 880 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மற்றும் 2006 டிசம்பர் 11 ஆம் திகதிய 15/2006 ஆம் இலக்கச் சுற்றறிக்கை இது அமுல்படுத்தப்படும் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்படுகின்றது.

தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.

8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/238